Registered as a NewsPaper பக்கங்கள் 06 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 17 ( 29 - 04 - 1992 ) புதன்கிழமை ஓசை: 71

## டிசம்பர் பரீட்சை முடிவு வார இறுதியில் வரும்

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரணதர) விசேட பரீட்சையின் பெறுபேறுகள் இந்தவாரத்தின் இறுதியில் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது இப்பரீட்சையில் சுமார் ஐம்பதாயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர் எனவும், இப்பரீட்சைப் பெறுபேறு இவ்வாரம் வெளிவருமெனவும், பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

# வட-கிழக்கு இணைப்பு குறித்து தமிழ் சிங்கள கட்சிகள் இழுபறி

## கட்டுவனிலிருந்து எறிகணை பொதுமக்கள் பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பொது மக்கள் வாழும்பகுதிகளைநோக்கி கண்டபடி எறிகணைத்தாக்குதல்களை நடாத்தியதில் பல பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்று பிற்பகல் 3.00 மணி முதல் மேற்படி பகுதியில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா நகரப்பகுதியில் ரகசிய சிங்கள குடியேற்றம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தொடர்ந்து சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ் மக்களின் எதிர்ப்பை அடுத்து இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசாங்க உயர் அதிகாரிகளின் ஒத்துழைப்புடன், ரகசியமாகவும், அதே வேளை வேகமாகவும் இக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

வவுனியா நகரப்பகுதியில் பஸ்நிலையப் பகுதியிலிருந்து தெற்கே கண்டிவீதியின் இரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா மேதினக் கூட்டம் விடுதலைப் புலிகள் ஏற்பாடு

(வவுனியா)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் வவுனியா மாவட்டத்தில் மே தினக் கூட்டம் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம் மே தினத்தை முன்னிட்டு, மக்கள் முன்னணி முக்கியஸ்தர்களினால் மக்களுடனான கலந்துரையாடல இடம் பெற்று வருகின்றது.

முதலாம் திகதி இடம் பெறும் இப் பொதுக் கூட்டத்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



கப்டன்

செல்லையா (நித்தி)



வீர வேங்கை

எல்லாளன்

மட்டக்களப்பு குறிஞ்சாமுனை எனுமிடத்தில் கடந்த 26ஆம் திகதி இயக்க வேலை காரணமாகச் செல்லும் போது சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட எதிர்பாராத மோதலில் கப்டன் செல்லையா (நித்தி) (இராசையா நித்தியானந்தன் - மஞ்சத்தொடுவாய் - மட்டக்களப்பு) வீரச்சாவடைந்தார்.

யாழ். தீவகத்தில் வேலணையில் 22-4-92 இல் எதிர்பாராத விதமாக இடம்பெற்ற மோதலின் போது இரண்டு விடுதலைப்புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். வீரச்சாவைத்தழுவிக்கொண்ட வீரவேங்கை புனிதன் (நமசிவாயம்-சிறிதரன் கச்சாய் வீதி வட்டக்கச்சி நிரந்தர முகவரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்ற தெரிவுக்குழு குழப்பம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்புத் தொடர்பாக கொழும்பிலுள்ள தமிழ்க் கட்சிகளுக்கும், சிங்களக் கட்சிகளுக்கும் இடையில் பெரும் இழுபறி நிலை உருவாகியுள்ளதாகத் தெரிய வருகிறது. இதன் காரணமாக அடுத்தமாதம் இரண்டாம் வாரத்தில் கூடவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு எதுவித முடிவையும் எடுப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு அம் மாகாணத்தில் ஒன்றிணைந்த அரசியல் நிர்வாக அமைப்புக்கு குறிப்பிடக்கூடிய அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும் கொழும்பிலுள்ள ஏழு தமிழ்க் குழுக்கள் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆனால், சிங்கள அரசாங்கக் கட்சிகள் வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்ப்பதாகத் தெரிகிறது. அரசியல் கட்சிகள் சில, தற்போதைய நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கு தற்காலிகமாக வடக்கு-கிழக்கைப் பற்றி யோசிப்பினும் எவரும் நிரந்தர இணைப்பிற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைத் தீர்விற்கு காத்திரமான அணுகுமுறை தேவை

- அஷ்ரப்

(கொழும்பு)

இனப் பிரச்சினை நீண்ட காலமாக இலங்கையை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இப்பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கமும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் காத்திரமான அணுகு முறையொன்றைக் கடைப்பிடிக்க வேண்டும்.

இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இனப்பிரச்சினைத்தீர்வுக்கான பாராளுமன்றத்தெரிவுக் குழுவில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி விலக வேண்டும் என்றும் இல்லாவிட்டால் தான் விலகப்போவதாக திரு. ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டிருந்தார்.

எனவே இந்த எண்ணத்தைக் கைவிட்டு இனப்பிரச்சினைத்தீர்வுக்குபாராளுமன்ற தெரிவுக்குழுவில் தொடர்ந்து அங்கம் வகிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அத்துடன் வடகிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## மடு அகதிமுகாமில் நீரில்லை மக்கள் வெளியேற முயற்சி

(மன்னார்)

மடு அகதி முகாமில் நிலவும் நீர் தட்டுப்பாடு, சுகாதார சீர்கேடு, தொற்று நோய்கள் காரணமாக அங்கிருந்து வெளியேற அகதிகள் முயன்று வருகின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக அங்கு நீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. நீருக்காக மக்கள் பல மைல் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலையுள்ளது. கிடைக்கும் நீரும் சுத்தமானதாக இருப்பதில்லை.

அங்கு நிலவும் சுகாதார சீர்கேடுகளால் வயிற்றோட்டம், வாந்திபேதி, நெருப்புக் காய்ச்சல் ஆகிய நோய்கள் பரவி வருகின்றன.

இவ்வருட ஆரம்பத்தில் இவ் அகதி முகாமில் 28,000 அகதிகள் தங்கியிருந்தனர். தமிழீழ

(6ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் ஊர்காவற் படையால் வாழைச்சேனையில் தமிழர் உயிருடன் புதைப்பு

(மட்டக்களப்பு)

வாழைச்சேனை மீராவோடை தமிழ் உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்கள் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் ஒருவர் உயிருடன் புதைக்கப் பட்டுள்ளார்.

திகம் பரராஜா சிவகுமார் (வயது 23) இராசலிங்கம் மகேஸ்வரன் (வயது 25) ஆகியோர் கடந்த 19 ஆம் திகதி கூட்டிச் செல்லப் பட்டனர் என்றும் இவர்கள் வீடு திரும்பாமையினால் இவர்களது பெற்றோர் 22 ஆம் திகதி பொலிசாரிடம் முறையிட்டனர் என்றும்,

பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து

(6ஆம் பக்கம் பார்க்க)

## தமிழிசை விழாவுக்கு நல்லூர் தயாராகின்றது

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகம் இசைக் கலைஞர்களை இணைத்து நடாத்துகின்ற தமிழிசைவிழாவிற்காக நல்லூர்க் கந்தசாமி கோவிலைச் சுற்றிய பகுதிகள் எழிற்கோலம் பூணுகின்றது. எங்கும் விழாவிற்கான சுவரொட்டிகளையும், பதாகை

(6ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டப் படிப்பிற்கான

## விரிவுரைகள்
## கல்வியாண்டு 1992/93

- கலைமுதற் தேர்வு (G. A. Q)
- வர்த்தக முதற் தேர்வு (First in Commerce)

விரிவுரைகள்

**02-05-92-ல் ஆரம்பமாகின்றன**

பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணி B. A விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

எமது வழமையான விரிவுரையாளர் குழுவினால் விரிவுரைகள் வழங்கப்படுகின்றன

**வங்கியாளர் பரீட்சை இடைநிலை**

மேற்படி பரீட்சைக்குரிய விரிவுரைகள்

**02. 05. 92-ல் ஆரம்பமாகின்றன**

குறிப்பு:- பட்டப்படிப்புகளுக்கெனத் தனித்துவமாக இயங்கும் நிறுவனம் யாழ்நகரில் இது மட்டுமே. (சி-4326)

## 41 ஆம் நாள் வீர அஞ்சலி
### கப்டன் பாவலன்

(பொ. சற்குணநாதன் உருத்திரா)
(மயிலிட்டி)

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 22-12-1970 | 19-03-1992 |



பாவலன் எமது அருமைக்
காவலன் எனக் களித்திருந்தோம்!
பூவுலகம் போற்றும் புனிதனாய்
மேவும் உன்னுயிரைத் தந்தாய்
மேதினியில் உன் நாமம் வாழும்!

இடம் பெயர்ந்த
மயிலிட்டிகடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புச் சங்கம்
காங்கேசன்துறை வீதி, பருத்தித்துறை.
(2498)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

நாவலர் வீதி, ஆனைப்பந்திச் சந்திக்கும் கைலாசபிள்ளையார் கோயிலுக்கும் இடையில் அல்லது அப்பலவாணர் வீதியில் வெள்ளை நிறக் கைப்பை (Purse) ஒன்று தவறிவிட்டது அதற்குள் முக்கிய ஆவணங்கள் உள்ளதால் கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (2511)

### அலங்கார உற்சவம்

அரியாலை சிறி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் சனிக்கிழமை (02-05-1992) அன்று ஆரம்பமாகிறது தொடர்ந்துபதின்மூன்றுதினங்களுக்கு நடைபெறும் விசேட உற்சவங்கள், எதிர்வரும் (15-05-1992) வெள்ளிக்கிழமை வைரவர் சாந்தியுடன் நிறைவுறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### போதைப் பொருள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானநிலையத்தில் சென்னையிலிருந்து திரும்பிய இலங்கைப் பயணி ஒருவரிடமிருந்து நானூற்று முப்பத்தைந்து கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது இதன் உள்ளூர்ப் பெறுமதி ஐந்து லட்சம் ரூபாவிற்கும் அதிகமானதாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது

### இடமாற்றம்

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இயங்கிவரும் வேலணை கோட்டக் கல்வி அலுவலகம் இன்று முதல் கோவில் வீதியில் இயங்கவுள்ளது.

இல. 57, கோவில் வீதியில் பணிமனை இன்று காலை 9 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்துவைக்கப்படும்.

### திருத்தம்

கடந்த ஞாயிறன்று (26-04 1992) வெளிவந்த இதழில் 'அக்குபங்சர் சிகிச்சை' என்ற தலைப்பின் கீழ் வெளியான விளம்பரத்தில் இடம்பெற்ற செல்வி கவிதா என்னும் பெயர் தவறுதலாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டுவிட்டது செல்வி கவிதா தகவல் தந்தவர் என்பதுவே சரியானதாகும்.

## மணிவிழா

(யாழ்ப்பாணம்)

நாற்பதாண்டுகளுக்கும் மேலாக சைவத் தமிழை வளர்ப்பதற்காக கதாப்பிரசங்கம் செய்து வருபவரும், நல்லை ஆதீன குருமகா சன்னிதானம் சுவாமிநாத பரமாச்சாரிய சுவாமிகளின் முதலவது சீடருமான 'தமிழ்மணி' சுப கணேசசுந்தரன் அவர்களின் மணிவிழா நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்றது

டாக்டர் நந்தி தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் கந்த. சாம்பசிவக் குருக்கள், மகாதேவாக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரையும், பிரபல பிரமுகர்களின் பாராட்டுகளும் இடம்பெற்றன. கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



### வீரவேங்கை றெஜினால்ட்

(பாலசிங்கம் கண்ணன்)

| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 26-08-1975 | 28-04-1991 |

காரைநகர், பரப்புக்கடந்தான் ஆகிய தாக்குதலில் பங்கேற்று, எதிரியை விரட்டியடித்து ஆனையிறவு களம்புகுந்தாய். நீ விட்ட பணியை நாம் தொடர்வோம்.

இம் மாவீரனை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

றெஜினோல்ட் வீதி,
நீர்வேலி வடக்கு
(சி/4339)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.


## LP வெற்று காஸ் சிலிண்டர்கள்

மொத்தமாக விற்பனைக்கு உண்டு

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**'சஞ்சீவி'**

31, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம்.

(2514)


## நினைவுகூருகின்றோம்... 1992-04-29

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வட்டுக்கோட்டையில் தேச விரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**கப்டன் லிங்கம்** (சிங்காரவேல் செல்வகுமார் - வல்வெட்டித்துறை)

1988 ஆம் ஆண்டு மன்னார், பரப்புக்கடந்தான் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**லெப். ஜீவன்** (மதியழகன் - திருக்கோணமலை.)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, மகிழடித் தீவுப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பரமானந்தன்** (க. மனோகரன் - திருப்பழுகாமம், மட்டக்களப்பு)

மன்னார் வஞ்சியன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். கோணேஸ்** (பிரான்சிஸ் சிவகுமார் - மறவன்புலவு)

**றோஜன் / றோயல்** (மு. ராஜகிருஸ்ணன் - எருவிட்டான், நானாட்டான், மன்னார்.)

ஆனையிறவில் சிறிலங்காப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ஆனந்தன்** (பத்மநாதன் கமலநாதன் - அம்மன் கோயிலடி, கோண்டாவில்.)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி/4338)

# பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாக்க அரசு ஆவன செய்யவும்

## - தேசிய பத்திரிகையாளர் சங்கம் கோரிக்கை

(புதுடில்லி)

தமிழக அரசு பத்திரிகைகளைஎதிர்க்கும் நிலையைமேற்கொண்டிருப்பதாகவும், இதற்கான சட்டப்பூர்வமான அனைத்து வழிகளிலும் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஆவன செய்யப்பட வேண்டுமெனவும்புதுடில்லியிலுள்ள தேசியப் பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.

மேலும் புதுடில்லி செய்தியாளர் சங்கமும், உத்தரப்பிரதேச செய்தியாளர் சங்கமும், மக்கள் எந்தத் தகவல்களையும் பயமின்றியும் பாரபட்சமின்றியும், அறிய வேண்டுமென்ற உரிமையின் அடிப்படையிலேயே பத்திரிகைகள் செயல்படுகின்றன என்றும், ஆதலால் பத்திரிகைகளை சட்ட வகையிலோ அல்லது சட்டமல்லாத வகையிலோ அச்சுறுத்துவது தவறு என்றும் கருத்துக் கூறியுள்ளது.

## பத்திரிகை ஆசிரியர்கள்

# மனு மீதான விசாரணை வியாழன் வரை ஒத்திவைப்பு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையினால் கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டுள்ள முரசொலிப் பத்திரிகை ஆசிரியர் செல்வம்,கோவையிலிருந்து வெளிவரும் மாலைமுரசு பத்திரிகை ஆசிரியர் சுந்தர் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் இது சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை எதிர்வரும் வியாழக்கிழமை வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

நீதிபதிகள் கார்வால், ஆனந்த் அடங்கிய உச்ச நீதிமன்றம் செய்தியாளர்களின் வழக்கறிஞர்கள் மேலும் சில ஆவணங்களைத் தாக்கல் செய்ய வேண்டியிருக்கின்றது எனக் கோரியதையடுத்து விசாரணையை ஒத்தி வைத்தது.

## பாரதிதாசன் அவர்களின்

# 101 ஆவது பிறந்தநாள்



வெள்ளம் போல்
தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்
அன்னார்
உள்ளத்தால் ஒருவரே
மற்றிங்கு
உடலினால் பலராய்
காண்பர்
கள்ளத்தால் நெருங்
கொணாதே என
வையம்கலங்கக்கண்டு
துள்ளும் நாள் எந்த
நாளோ?
துயர்தீரும் நாள்எந்த
நாளோ?

- பாரதிதாசன்

திராவிடச் சிந்தனையின் மூத்த கவிஞர்களில் ஒருவரான கவிஞர் பாரதிதாசனின் நூற்றியோராவது பிறந்தநாள் இன்றாகும்.

# ஜேர். வெளியுறவு அமைச்சர் 18 வருடத்தின் பின் ஓய்வு

ஜேர்மனி நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஹென்சர் தான் அமைச்சர் பதவியை விட்டு விலகப் போவதாக அறிவித்திருக்கிறார்.

உலகிலேயே அதிக வருடங்கள், 18 வருடங்கள் வெளியுறவுத்துறை அமைச்சராகப் பதவி வகிக்கும் ஹென்சர், மே 17 ஆம் திகதி அமைச்சர் பதவியிலிருந்து விலகப் போவதாகக் குறிப்பிட்டார்,

1974 ஆம் ஆண்டுமே 17 ஆம் திகதி மேற்கு ஜேர்மனியில் வெளியுறவு அமைச்சராகப் பதவிஏற்ற இவர் சரியாக பதினெட்டு வருடங்களுக்குப் பிறகுவரும் மே 17 ஆம் திகதி பதவி விலகுகிறார்.

65 வயதான இவர் மார்பு நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், 25 வருட அரசியல் வாழ்க்கை போதுமென்று கருதுவதாகவும் பதவி விலக முன்வந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# அந்நிய சக்திகள் எதுவும் உடன் ஒடுக்கப்படும்

## டென் பியான் பிங்

(பீஜிங்)

சீனா நாட்டில பிறநாட்டுச் சக்திகள் என எதுவும் தலைதூக்கினால் அந்தச் சக்திகள் உடனடியாக ஒடுக்கப்படும் என சீனாவில் அதிக அதிகாரம் கொண்டவர் எனக் கருதப்படும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் டென் பியான் பிங் கூறியிருக்கிறார்.

சீனக் கம்யூனிஸ அரசின் அமைப்பை நிலை நிறுத்தவும் ஜனநாயக கட்சிகளுக்கு உதவ வெளிநாட்டுத் தலையீடு இருக்குமாயின் சீனா அதன் இராணுவத்தை உபயோகிக்கவும் தயங்காது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

# மணலாறு மண்ணில் மாவீரம் படைத்தவர்கள்!



லெப்
கருணன்
(கர்ணன்)



லெப்
செங்கோலன்
(தயான்)



2.ம் லெப்
முத்து
(அசுந்தன்)

மணலாறு மண்ணில்
கணநேரமும் ஓயாது

மாவீரர் ஆனீர்கள்
களத்தில் நும்பணி தொடரும்



கப்டன்
சிவராசன்
(சிவராஜ்)

Liberation Tigers Of TAMIL EELAM



கப்டன்
வேங்கையன்
(ரத்தன்)

மணலாறு மாவட்டத்தில் கடந்த 25.04.92 அன்று சிறிலங்கா இராணுவத்தினர் மீது நடத்திய தாக்குதலின் போது வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீர வேங்கைகள்.


''நாகதம்பிரான் நல்லருள்
நாடெங்கும் பாலிக்குக''

## எமது இதயம் கனிந்த

# நன்றி நவிலல்

அன்புடையீர்,

கடந்த 18 - 03 - 92 புதன்கிழமையும் அடுத்தநாள் அதிகாலைவரை நடைபெற்று முடிவடைந்த புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய ஆண்டுற்சவப்பொங்கல் விழாவினை பல்லாயிரக்கணக்கான அடியார்களின் நலன்கருதியும் நல்ல முறையில் நடாத்தி முடிக்க ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் நல்கிய அரச திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், மக்களின் உயிர், உடைமை, பாதுகாப்பு ஆகியவற்றுக்கு பொறுப்பாக இருந்த எங்கள் இளைஞர்களுக்கும், கண்டாவளை தர்மபுரம் பாடசாலை சாரணர்களுக்கும், செஞ்சிலுவைச்சங்கங்களின் தொண்டர்களுக்கும், ஆலயத் தொண்டர்களுக்கும், விசேடமாக சூழ்நிலைகளையும் பொருட்படுத்தாது போக்குவரத்து வசதிகளை நல்கிய சகல வாகனச் சொந்தக்காரர்களுக்கும் மினிபஸ்கள், தனியார் வாகனங்கள், லொறிகள் உரிமையாளர்களுக்கும், கரைச்சி வடக்கு ப. நோ. கூ. சங்கத்தினருக்கும் மற்றும் தேவையான சேவைகள் எவையோ அவற்றை எல்லாம் கேளாமலே மனமுவந்து முன்வந்து நல்கிய சகலருக்கும் தனித்தும் ஒருமித்தும் எங்கள் இதயம் கனிந்த நன்றியினை அன்புடன் சமர்ப்பிக்கின்றோம்.

நன்றி

எஸ். எஸ். சின்னத்தம்பி
(இணைச்செயலாளர்)

சொக்கலிங்கம் அமிர்தலிங்கம்.
தலைவர்: (மேலதிக அரச அதிபர். நிர்வாகம்)

வைரமுத்து வனேஸ்வரன்
(உப தலைவர்)

நா.வீரகத்திப்பிள்ளை (ஐங்கரன்)
பொருளாளர் - பிரதம பூசகர்

புளியம்பொக்கணை நாகதம்பிரான்
ஆலய திருப்பணிச்சேவை

பரந்தன்
29. 03 92

(சி/4337)

## ஓராண்டு நினைவஞ்சலி

| வீர ஜனனம் | | வீரச் சாவு |
|---|---|---|
| 24 — 04 — 1972 |  | 12 — 05 — 1991 |

12. 05. 91 அன்று ஓமந்தையில் நடந்த நேரடி மோதலில் வீரச்சாவடைந்த ''சாள்ஸ் அன்ரனி'' படைப் பிரிவைச் சேர்ந்த

### கப்டன் வெங்கடேஸ்
(பாலசுப்பிரமணியம் மோகனதாஸ்)
(வல்வெட்டித்துறை)
திதி: 30. 4. 92

எங்கு மலைந்து திரிந்தாலும்
எங்களுக்கோர் நில மின்றேல்
இங்கு மிவர் வாழ்வதிலும்
ஏது சுகம் காண் பதடா
வேங்கை யிவன் வெங்கடேசன்
வந்த நிலம் காப்பதற்கோ
அங்கு தடைத் தாண்டி குளத்
தாக்குதலில் ஒப்பற்ற வேங்கையாய்
எதிரிகளை பந்தாடி மறைந்தானோ?
உயிருள்ள வரை உன்
பெயர் நிலைத்திருக்கும்
நீ மறைந்து விட்டாலும் உன்
நினைவு எம் நெஞ்சை விட்டு
என்றென்றும் அகலாது

உன் நினை வால் விழிநீர் சொரியும்

''அம்பிகாவாசம்'' அப்பா, அம்மா, அண்ணன்மார்,
வேம்படி ஒழுங்கை, அக்கா, தம்பி, அத்தான்
வல்வெட்டித்துறை அண்ணி, பேர்த்தி (2513)

## தற்கொலைகள் அதிகரிப்பு

வவுனியா மாவட்டத்தில் திடீரென்று தற்கொலை மரணங்கள் அதிகரித்துள்ளன.

கிராமப் புறங்களைச் சேர்ந்த இளம் பெண்கள் பலர் விரக்தியடைந்த நிலையில் கிருமிநாசினி அருந்தி அல்லது நச்சுக்காய்களை உண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இம் மாதத்தில் மட்டும் பலர் இவ்வாறு தற்கொலை செய்துள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

சமீப நாட்களில் சேமடு, மண்கிண்டி, இரணை இலுப்பைக்குளம், கோவில் புளியங்குளம் ஆகிய பகுதிகளில் இளம் பெண்கள் தற்கொலையில் ஈடுபட்டு தமது உயிரை மாய்த்துள்ளனர்.

இப்பகுதிகளில் போதிய வைத்திய வசதி இல்லாத காரணத்தினால் தற்கொலை முயற்சியில் ஈடுபடுவோரை காப்பாற்ற முடியாத நிலை எழுந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (தி)


## அவசரக்கூட்டம்

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்தில் பளைக் கொத்தணி, கொடிகாமக்கொத்தணி உசன் கொத்தணி, வரணிக் கொத்தணியில் கடமைபுரியும் அதிபர், ஆசிரியர்களை நாளை மு. பகல் 9.00 மணிக்கு கொடிகாமம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை மண்டபத்திற்கும் மட்டுவில் கொத்தணி, கைதடிக் கொத்தணி அதிபர், ஆசிரியர்களை நாளை மு.ப.10.30 மணிக்கு யா/றிபேக் கல்லூரி மண்டபத்திற்கும் தவறாது வருகை தரும்வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## வர்த்தகநிலையம் மூடப்படும்

மே தினத்தன்று நல்லூர் பிரதேசத்திற்குஉட்பட்டவர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

## நான்கு ஆண்டுகள் உதிர்ந்த கண்ணீர் பூக்கள்



### செல்வன் க. முகுந்தன்
தேசத்துரோகிகளால் அணைக்கப்பட்ட மாணவ மணிச்சுடர்

| அன்னை மடியில் மலர்ந்தது | அரக்கர் பிடியில் உதிர்ந்தது |
|---|---|
| 21-8-1972 | 28-4-1988 |

எங்கள் உயிரின் உயிரே முகுந்தாக் குட்டி நீ
எங்கே ஐயா போய் விட்டாய்
பாதகத்துரோகிகளிடம் உன்னைப் பறிகொடுத்து
பரதவித்து நிற்கின்றோம் ஐயா!
எங்கள் வாழ்வின் ஒளிவிளக்கான உன்னை
இழந்து இருள் மண்டிக் கிடக்கின்றோம் ஐயா
அண்ணன் விடுதலை வேங்கை என்பதற்காக
அருமைத்தம்பி உன்னை அன்னையின்
கைப்பிடியில் இருந்து பறித்து இழுத்து
உன் உயிர் குடித்தார்கள் வெறியர்கள்
கொடுமையிலும் கொடுமை ஐயா
ஆதரவின்றித் தவிக்கும் எமக்கு ஆறுதல்
அளிக்க என்று வருவாய் ஐயா
அன்பின் உருவே! அறிவின் வடிவே!!
முகுந்தா, முகுந்தா முகுந்தாக்குட்டி
ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் உன்னை
அரைக் கணமும் மறக்கமுடியவில்லையே ஐயா.

இராமநாதபுரம், கணந்தோறும் உன் நினைவால்
கிளிநொச்சி கலங்கி வாடும்
அம்மா, அப்பா, அக்கா,
(2516) அண்ணா, தங்கை

# புரட்சிகர மேதினம் - 1992

## மே-1

## மாபெரும் எழுச்சி ஊர்வலமும் பொதுக்கூட்டமும்

புரட்சியில் பொங்கிநிற்கும் அன்புக்குரிய மக்களே!

பொருளாதாரத் தடைவிதித்து வாட்டி வதைக்கின்றார்
மருத்துவ வசதியின்றி மக்கள் மடிந்து போகின்றார்!
குண்டுகள் போட்டு எம்மைக்கொன்று குவிக்கின்றார் - இவை
கண்டு நாமடங்க நாமென்ன அடிமைகளா?
அடிமை செய்தான் எம்மை அடக்கிவைத்தான்.
அடங்க மாட்டோம் என அடிகொடுத்தோம்!
எரிமலை எனவே புறப்படுவோம்! - போரில்
வென்றிடுவோம் நாம் வென்றிடுவோம்!

சிந்திய குருதியில் தோய்ந்த நம் தோழர்கள்
ஏந்திய செங்கொடி நாட்டிட வாருங்கள்!
உரிமையை வென்றிட உயிரையும் கொடுத்தே
போரிடும் கூட்டமாய் புறப்பட்டு வாருங்கள்!!
எங்கள் ஈழவர்களே!!
உங்கள் உரிமைக்குரல்கள் உலகெங்கும் கேட்கட்டும்!
எழுந்து வாருங்கள்!
வருகின்ற மேதினம் எங்களுக்காய் அமையட்டும்!!

**எழுச்சி ஊர்வலம் ஆரம்பிக்கும் இடம் : மருதனார்மடம் சந்தி**
**பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் : யாழ். பல்கலைக்கழகம்**
**நேரம் : பி. ப. 2.00 மணி**

மலேரியா தடை இயக்க ஊழியர்கள்
யாழ்ப்பாணம்.

(2512)

## சிந்தனைக்கு

ஆத்திரம் இளமையைச் சாரும் என்பதும்,
நிதான முன் யோசனை முதுமையைச்
சாரும் என்பதும் நன்கறிந்த உண்மை

— ஸிஸ்ரோ

ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 29-04-1992
தொலைபேசி
ஆசிரியர் பீடம் 025-1880 நிர்வாகபீடம் 8808
த. பெ. எண் 05

# இந்தியா மீண்டும் அவசரப்படுமா?

இந்தியாவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து அதிகாரிகள் மட்டத்தில் பெரும் கருத்து மோதல்கள் நிலவுவதாகத் தெரிய வருகிறது. இதன் காரணமாக விடுதலைப் புலிகளை தடை செய்வது குறித்து இறுதித் தீர்மானத்தை இந்திய அமைச்சரவை எடுக்கவுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து சாதக பாதக அம்சங்களை ஆராய்ந்த இந்திய உள்துறை அமைச்சு, சட்டத்துறை அமைச்சு, வெளிவிவகார அமைச்சு என்பன எதுவித முடிவையும் எடுக்க முடியவில்லை. இலங்கையின் புவியியல் ஆய்வு, உள்நாட்டு அரசியல், இந்தியாவின் நீண்டகால நலன் என்பன குறித்தே அதிகாரிகள் மட்டத்தில் பெரும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

வெளிவிவகார அமைச்சில் உள்ளவர்களில் அனேகர், விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதால் நீண்டகால நோக்கில் இந்தியாவிற்கு பாதகமான விளைவுகளே ஏற்படும். நன்மை எதுவும் ஏற்படப்போவதில்லை எனக் கருதுகின்றனர். உள்துறை அமைச்சகமோ புலிகளைத் தடை செய்வதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், அதற்காக தமிழ்நாட்டில் அமுலாக்க வேண்டி வரும் கடுமையான சட்டங்களினால், ஆளும் கட்சியான அ. தி. மு. க. அரசியல் பழிவாங்கலில் ஈடுபட்டு தமிழ்நாட்டில் பெரும் அரசியல் நெருக்கடியும் அதைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டம் ஒன்றும் வளர்ச்சி அடைதல் தவிர்க்க முடியாது போய்விடும் என எண்ணுகிறது. சட்டத்துறை அமைச்சோ, வெளிநாடுகளில் உள்ள இயக்கங்களை தடை செய்வதற்கு பல சட்ட மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனக் கருதுகிறது. அதாவது புலிகளைத் தடைசெய்வது சிக்கலானதும், அதே வேளை நீண்டகால நோக்கில் நன்மை பயக்கக் கூடியதும் அல்ல என இவ் அமைச்சுகளில் அனேகர் கருதுகின்றனர். இவ் அமைச்சகத்தின் முடிவுகள் இலங்கை விவகாரத்தில் கடந்த கால அணுகுமுறையை ஓரளவு கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

இந்நிலையில், தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீண்டும் விடுத்த கோரிக்கையைத் தொடர்ந்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் செயலாளர்களின் நிர்வாகக்குழு ஒன்றை அமைத்தார். இவ் நிர்வாகக் குழுவும் தீர்மானம் எதையும் எடுக்க முடியவில்லை. இவ் நிர்வாகக் குழுவில், இந்திய இராணுவ அதிகாரிகள், புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள், உள்துறை அமைச்சு, சட்டத்துறை அமைச்சு, வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் கலந்து கொண்டனர். ஆனால், இங்கும் தீர்மானம் எதையும் எடுக்க முடியவில்லை.

இந் நிலையிலேயே இன்று விடுதலைப்புலிகளை தடைசெய்வது குறித்து ஆராய அமைச்சரவையை கூட்டுவதென இந்திய அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. அதாவது அதிகாரிகள், இராஜதந்திரிகள் மட்டத்திலிருந்து பிரச்சினை தீர்வு அரசியல்வாதிகளின் கைகளுக்கு மாறியுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் இராஜதந்திரிகள், அதிகாரிகளின் ஆலோசனைகளை கடந்தகாலத்தில் புறந்தள்ளி அரசியல் வாதிகள் நடந்து கொண்டமையினாலேயே இந்தியா, இனப்பிரச்சினை விவகாரத்தில் பெரும் இராஜதந்திர இராணுவத் தோல்வியைத் தழுவிக் கொள்ள வேண்டிய ஓர் நிலை ஏற்பட்டது. தற்பொழுதும் மீண்டும் அதிகாரிகள், இராஜதந்திரிகளின் நிலையிலிருந்து பிரச்சினை அரசியல்வாதிகளிடம் கைமாறுகின்றது.

ஆனால், இந்தியாவில் இன்று முன்னைய பிரதமர் ராஜீவ்காந்தி போன்ற ஓர் அவசரம் நிறைந்த அனுபவமற்ற ஒருவர் பிரதமராக இல்லை. அனுபவமும் இராஜதந்திர வழிமுறைகளை நன்கு அறிந்தவருமான நரசிம்மராவ் பிரதமராகவுள்ளார். அத்தோடு இலங்கைத் தமிழர் விவகாரத்தில் 1983 இல் இருந்து நேரடியாகச் சம்பந்தப்பட்டு விவகாரங்களையும் அறிந்த ஒருவர் இந்தியப் பிரதமராக உள்ளார்.

இந் நிலையில் கடந்த காலத்தைப் போல், சில அரசியல் அனுபவமற்ற அரசியல்வாதிகளின் கோரிக்கைகளுக்காக இந்தியாவின் நீண்டகால நலனைப் பாதிக்கக்கூடிய முடிவு ஒன்றை அவர் எடுப்பாரானால் அது இந்தியாவையே பெருமளவில் பாதிக்கும். அத்தோடு இந்தியாவிற்கு இலங்கை விவகாரத்தில் மீண்டும் ஒரு இராஜதந்திரத் தோல்வியாக அது அமையும் என்பதிலும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

# உடுகம்பொல அறிக்கை; சபாநாயகர் தீர்மானிப்பார்

### - ரணில் விக்கிரமசிங்க விளக்கம்

(கொழும்பு)

உடுகம் பொலவின் அறிக்கை தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த அனுமதிப்பதா? இல்லையா? என்பது குறித்து சபாநாயகர் எம். எச். மொகமட் தீர்மானிப்பார் என்று சபை முதல்வர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்தார்.

தன்னிடமிருக்கக் கூடிய தஸ்தாவேஜுகளையும் உடுகம் பொலவின் அறிக்கையை பிரசுரித்த அத்தவுக்கும், முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் உடுகம் பொலவிற்கும் எதிரான குற்றச் சாட்டுகளையும் தான் சபாநாயகரிடம் அனுப்பி வைத்திருப்பதாக அவர் கூறினார்.

எதிர்க்கட்சியினர் தமது அறிக்கையை சபாநாயகருக்கு அனுப்பி வைக்கலாமென்றும் அதன் பின்னர் பாராளுமன்றத்தில் அது குறித்து விவாதிக்க அனுமதிப்பது இல்லையா என்று பின்னர் சபாநாயகர் தீர்மானிப்பாரென்றும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா சொன்னார்.

உடுகம்பொலவின் குற்றச் சாட்டுக்கள் பற்றி விசாரிக்க விசேட ஆணைக்குழுவொன்று நியமிப்பதற்கு அரசாங்கம் எதிர்ப்புத் தெரிவிக்குமா என்று கேட்டபோது ஒரே விடயம் குறித்து நீதிமன்றமும் ஆணைக்குழுவும் ஒரே சமயத்தில் விசாரிக்க முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

உண்மையைக் கண்டறிய அரசாங்கம் விரும்புகிறது. நீதி மன்றத்தின் முன்னால் தமது குற்றச் சாட்டுகளை நிரூபிப்பதன் மூலம் உடுகம் பொல உண்மையை நிரூபிக்கலாம். அத்த பத்திரிகை தான் பிரசுரித்த அறிக்கையை நிரூபிக்க நீதிமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்தலாம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## பரு. வைத்தியசாலைக்கு விசர்நாய்க் கடி மருந்து

(வடமராட்சி கிழக்கு)

'குமலனா' கப்பலில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு விசர்நாய்க்கடி தடை மருந்து (ஏ. ஆர். வி) இரண்டாயிரம் மில்லி லீற்றரும், ஜெனரேட்டர் ஒன்றும் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சேவை புரியும் பிரான்ஸ் வைத்தியக் குழுவினரின் முகவரிக்கு இப்பொருட்கள் கொழும்பிலிருந்து அனுப்பப்பட்டிருந்தன.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையினர் பிரான்ஸ் வைத்தியக் குழுவினர் மூலம் ஜெனரேட்டரினை கொழும்பிலிருந்து கொள்வனவு செய்துள்ளார்கள்.

(36, 25)

மே நாளின்

## லங்கா சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் சித்திரை மாத 25 சதவீத சம்பளப்பணம் கடந்த திங்கட்கிழமை முதல் சுன்னாகத்திலுள்ள தற்காலிக காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுகிறது என நிறுவன உதவி பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## மூதூரில் குடும்பப் பெண் இராணுவத்தினரால் கைது

(மூதூர்)

திருக்கோணமலையிலும், மூதூரிலும் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. கடந்த இருபதாம் திகதி மூதூர் பொலிஸ் நிலைய இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் பச்சைநூல் கிராமத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தாயான பெரியநாச்சி ஜாவதி என்னும் பெண்ணைக் கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

## சிறந்த ஊர்திக்கு பரிசு வழங்கப்படும்

எதிர்வரும் மேநாளில் பங்குபற்றும் ஊர்திகளில் சிறந்த ஊர்திக்குப் பரிசு வழங்கப்பட இருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்களுறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

பேரினவாதத்தின் கொடூரத்தில் இருந்து விடுபடுவதற்கான வீரம் செறிந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை உயிரோட்டத்துடன் பிரதிபலிக்கக் கூடிய சிறந்த ஊர்திகளைத் தெரிவு செய்வதற்காக - தகுதி காண்பதற்காக நடுவர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

## இருவர் மரணம்

வவுனியா மாவட்டத்தில் உள்ள செக்கட்டிப்புலவு என்னும் கிராமத்தில் மின்னல் தாக்கியதால் இருவர் மரணமடைந்தனர். சிவசாமி மீனாட்சியும், அவரது மகள் நிர்மலா என்பவருமே இவ்வாறு மரணமடைந்தவர்களாவர்.

## துப்பாக்கி வெடித்து பொலிஸ் மரணம்

(மட்டக்களப்பு)

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தின் முன்னால் சோதனை கடமையில் ஈடுபட்டிருந்த பொலிசாரில் ஒருவர் அவருடன் கூட கடமையில் நின்ற சக பொலிஸ்காரரின் துப்பாக்கி தற்செயலாக வெடித்ததினால் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

இந்தத் துப்பாக்கி வெடிக்கு இலக்காகிப் பலியானவர் 22 வயதான அலாப்தீன் என்பவராவர்.

## மூன்று குழந்தைகள் ஒரே தடவையில் பிரசவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இளம்தாய் ஒருவர் மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்தார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த முப்பது வயதான இளம்தாயே இரண்டு பெண் குழந்தைகளையும் ஓர் ஆண் குழந்தையையும் பெற்றெடுத்தார்.

இம்மூன்று குழந்தைகளும் வழமையாகப் பிறக்கும் குழந்தைகளின் நிறைகளிலும் பார்க்க குறைவாக இருந்த போதிலும் தாயும் குழந்தைகளும் நலமுடன் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச. க)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் பதினொரு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வலிகாமம் மேற்கு பிரிவிலுள்ள கழகங்களுக்கிடையிலான விலக்கல் முறையிலான குழு நிலை இறுதிப் போட்டியில் இன்று திருமலை நட்சத்திரங்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 30 மணிக்கு இப்போட்டி ஆரம்பமாகவுள்ளது.

## பேராதனை உப வேந்தரை மாணவர் தடுத்து வைத்தனர்

(கண்டி)

பேராதனை பல்கலைக்கழகத்தில் உபவேந்தர் பேராசிரியர் மல்கொம் பெர்னான்டோவையும் வேறு பலரையும் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பல மணித்தியாலங்களாகப் பொது அறையில் தடுத்து வைத்திருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில பாதுகாப்பு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்ட அடையாள அட்டைகள் திருப்பித் தரப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே இவர்களை மாணவர்கள் தடுத்து வைத்தனர்.

பேராசிரியர் லெஸ்லி குணவர்த்தன, பிரதம பாதுகாவல் அதிகாரி கிறிஸ்தோபர் பெரேரா, மாணவர் சங்கச் செயலாளர் ஆகியோரும் தடுத்துவைக்கப்பட்டனர்.

## உதைபந்தாட்டபோட்டி விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரம் நடாத்தவுள்ள ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் நாளை முப்பதாம் திகதிக்குள் விண்ணப்பிக்கலாம்

தமிழீழத்தில் உள்ள அனைத்துக் கழகங்களும் இதில் கலந்து கொள்ளலாம். விண்ணப்பிக்க விரும்பும் கழகங்கள் தமது விண்ணப்பப்படிவங்களைத் தாசன் அச்சகம், வைமன் வீதி, நல்லூர், சிங்கர் கம்பனி, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகத்திலும் சமர்ப்பிக்கலாம்.

# ஆப்கானில் புதிய ஆட்சி 51பேர் கொண்ட இடைக்கால அரசு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் 51 உறுப்பினர்களைக் கொண்ட புதிய இடைக்கால சபையின் தலைவர் பேராசிரியர் ஷேக்கப்துல்லா காபூலில் நேற்று பதவியேற்றார்.

பாகிஸ்தானிலிருந்து தரை மார்க்கமாக புறப்பட்ட இவர் காபூலுக்கு வெளியே உள்ளூர் தலைவர் ஒருவரின் கட்டுப் பாட்டில் உள்ள கிராமத்தில் நேற்று முன் தினம் இரவு தங்கிய பின்னர், இந்தச் சபையின் பாதி அளவு உறுப்பினருடன் நேற்று அவர் காபூல் போய்ச் சேர்ந்திருந்தார் இவரிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டது

இதே வேளை காபூலில் சண்டை சிறிது தணிந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

குல்யத்தின்ஹேக் மத்தியாருக்கு ஆதரவான படைகளை காபூல் விமான நிலையத்துக்கு எதிரேயுள்ள மலைப்பகுதியிலிருந்து அகட்ஷா மஸூதீன் தலைமையிலான போட்டி முகாஜிதின்குழுவின்படைகள் பின்நோக்கித் தள்ளிவிட்டன;

இதனிடையே காபூலுக்கான சண்டை முடிந்து விட்டது எனக் காபூல் வானொலியை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்தி ஒன்று கூறுகிறது.

தலைநகர் காபூலில் வாழும் மக்கள் அச்சப்பட வேண்டாம் என்று காபூல் வானொலி அரைமணி நேரத்துக்கு ஒரு தடவை ஒலிபரப்பிக் கொண்டிருக்கிறது நிலைமை இயல்பாக இருக்கிறது என்று வானொலி தெரிவிக்கின்றது. அரசுப் பணியாளரை வேலைக்குத் திரும்புமாறு வானொலி கேட்டுள்ளது.

## கலைஞர்களுடன் கலந்துரையாடல்

யாழ் குடாநாட்டில் உள்ள மெல்லிசைக்கலைஞர்கள் குழுவினர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வொன்று எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் கோண்டாவிலில்அமைந்துள்ள எமது விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகத்தலைமைச் செயலகத்தில் இடம் பெறவிருக்கின்றது கலைஞர்கள், இசைக் குழுவினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

## நலன்புரி நூலகத்திற்கு கலை பண்பாட்டுக் கழகம் நூல்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நோயாளர் நலன் புரிச்சங்க நடமாடும் நூலக சேவைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழகம்மூவாயிரம் ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளது

யாழ். போதனா வைத்திய சாலை விடுதிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர்களின்நன்மை கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந் நூலக சேவைக்குஈழத்துஎழுத்தாளர்கள் தமது ஆக்கங்களை அன்பளிப்புச் செய்து இச் சேவைக்கு ஒத்துழைக்க வேண்டும் என நலன்புரிச் சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## சபாநாயகர் உத்தரவை தடுக்கக் கோரிக்கை

(டில்லி)

தமிழ்நாடுசட்டப்பேரவைச் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பிறப்பித்துள்ள பிடிவிறாந்திலிருந்து தனக்குப் பாதுகாப்பளிக்கும்படி கோரி இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இன்டியா முன்னாள் செய்திபாளர் கே. பி. சுனில் உச்ச நீதிமன்றத்தில் நேற்று மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு மீதான விசாரணை இன்று நடைபெறவுள்ளது

சட்டப் பேரவையில் கே பி. சுனிலைஆஜராக்கோரி சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா பிறப்பித்த ஆணையை எதிர்த்து சுனில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் பேரில் உச்ச நீதிமன்று சபாநாயகரின் உத்தரவை இடை நிறுத்தி வைக்குமாறு கட்டளை பிறப்பித்தது.

தன்னைக் கைது செய்வதற்கு டில்லிப் பொலிஸ் தமிழ்நாடு பொலிசுக்குஉதவுவதைத் தடுக்குமாறும், முன்னதாக வழங்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை மீறாமல் தடுக்கும்படியும் அந்தமனுவில் கோரப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு சட்டசபையை நிருபர்கள் புறக்கணிப்பு

(சென்னை)

தமிழ் நாடு சட்டப் பேரவைக்கு வர அனுமதி வழங்கப்பட்டிருக்கும் 51 நிருபர்களில் தினத்தந்தி, மக்கள்குரல் மாலைமலர்,தினமலர், வானொலி, தொலைக் காட்சி உள்ளிட்ட பலவற்றிலும் 23 நிருபர்கள் செய்தி சேகரிக்க வந்திருக்கிறார்கள் என்று நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் பேரவையில் கூறினார்.

புறக்கணித்த நிருபர்கள் தமது முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார். பத்திரிகைகள் மீது எந்தக் காழ்புணர்ச்சியும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார். நீதிமன்றத்தைப் போல் பேரவைக்கும் நீதித் தன்மை உள்ளதென்றும், இதனைக் கட்டிக்க க்கவே இத்தகைய குறைந்த பட்ச நடவடிக்கை மேற்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தென் பகுதி பயணிகள் தொகையில் வீழ்ச்சி

(வவுனியா)

வடபகுதியிலிருந்து வவுனியா நகரப்பகுதிக்கும் தென் பகுதிக்குமான போக்குவரத்தை மேற்கொள்ளும் தமிழ்ப் பயணிகளின் தொகை குறைந்துள்ளது.

யாழ். குடாநாட்டிலிருந்து கொழும்பிற்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகளைத் தவிர, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலிருந்து தென் பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகள் மிகவும் குறைவு.

புது வருட தினத்தின் பின்னர் இப் பயணிகள் மிகக் குறைந்தளவிலேயே பயணம் செய்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பேயாடிகூழாங்குளம் இராணுவ சோதனை முகாம் பகுதியில் தொடர்ந்து இடம்பெறும் இராணுவ அச்சுறுத்தலினால் இப் பயணிகள் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. (தி)

### வவுனியா மேதினம்

தின் பின்னர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சிகளில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. (தி)

## சர்வதேச செஞ்சிலுவைக்கு கப்பலில் மருந்துப் பொருள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மருந்துப்பொருள்கள் கப்பல் மூலம் எடுத்துவரப் பட்டுள்ளன

நேற்று வந்த குமண கப்பலில் இம்மருந்துப் பொருள்கள் எடுத்துவரப்பட்டதாகவும், இம்மருந்துப் பொருள்கள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வழங்கப்படும் எனவும் தெரியவருகிறது. (75)

### வவுனியா

காமையில் உள்ள பகுதிகளில் நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டு வருகின்றன.

இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து சென்றுள்ள தமிழ்க் குடும்பங்களின் காணிகளில் அல்லது வீடுகளில் இக் குடியேற்ற நடவடிக்கை துரிதமாகமேற்கொள்ளப்பட்டு வருகிறது

இதன் காரணமாக இடம் பெயர்ந்து சென்ற தமிழ்க் குடும்பங்கள் மீளக்குடியமர முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (தி)

## 2000 அகதிகள் விரைவில் விமானம் மூலம் வருவர்

தமிழ் நாட்டிலிருந்து தமிழ் அகதிகள் விமானம் மூலம் கொண்டுவரப்பட விருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.இவர்களில் சுமார் இரண்டாயிரம் பேர் விரைவில் விமான மூலம் அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என சென்னையில் செய்தி வெளியிடப் பட்டுள்ளது.

### வீரச்சாவு

4ஆம் வட்டாரம், புங்குடுதீவு) வீரவேங்கை எல்லாளன் (நிசாந்தன்-பொன்னுத்துரை தங்கத் துரை ஐந்தாம் 'வட்டாரம் வேலணை மேற்கு வேலணை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்

### வாழைச்சேனை

மேற்படி இருவரது சடலங்களும் மீராவோடை ஊர்காவல் படையினரின் முகாமிற்கு அருகில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

தோண்டி எடுக்கப்பட்ட சடலங்கள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது இருவரில் ஒருவர் அடித்துக் கொல்லப்பட்டிருப்பதும், மற்றைய நபர் உயிருடன் புதைக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது.

### இனப்பிரச்சினை

வட - கிழக்கு முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு அத்தியாவசியமானதாகும். முன்னர் இழைத்த தவறுகள் மீண்டும் இழைக்கப்படக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

வடக்கு - கிழக்கிற்குமட்டும் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தினால் போதும் எனக்கோரும்போது எத்தனை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வடக்கு கிழக்கில் நிலவுகின்ற பிரச்சினைக்குத் தீர்வு காணப் படவேண்டியதன் அவசியத்தைப் பற்றி உணருகின்றார்களோ தெரியவில்லை என்று குறிப்பிட்டார்.

### தமிழிசை

களையும் காணக்கூடியதாக உள்ளது. நல்லூர் வடக்கு வீதியில் அழகான கலையரங்கம் உருவாகி வருகின்றது. மின்னிணைப்புகளும், ஒலிபரப்பிச் சாதனங்களும் ஏற்படுத்தப்படுகின்றன. குடாநாட்டில் இருந்தும், மற்ற மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் விழாவிற்கு வந்து கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதனால் அவர்களின் வசதிகள் கருதி பல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன விழாவிற்கு வரும் மக்களின் தேவைகளையும், ஒழுங்குகளையும் தமிழீழக் காவல்துறையினரும் மாணவ அமைப்புத் தொண்டர்களும் ஏற்படுத்திக்கொடுக்கவுள்ளனர். எதிர்வரும் 2 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரையிலான 5 தினங்களும் தினசரி மாலை 5 மணிக்குத் தமிழிசை விழா ஆரம்பமாகி இரவு 11 மணிக்கு முடிவுறும். தமிழீழத்தின் நூறு இசைக்கலைஞர்கள் பங்கேற்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

### மடு அகதி

விடுதலைப் புலிகள் விவசாயம் மற்றும் சுயமுயற்சிகளில் மக்களுக்கு உதவியதை அடுத்து பெருமளவு மக்கள் முகாம்களிலிருந்து வெளியேறியுள்ளனர்.

முகாமில் ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து அங்குள்ள பலர் வெளியேற முயல்கின்றனர்.

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளின் மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கான மனைப்பொருளியல் சேவைக்காலப் பயிற்சி வகுப்பு ஒன்று பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் சனி, ஞாயிறு காலை 8.30 மணிமுதல் 4 30 மணிவரை நடைபெறவுள்ள இப் பயிற்சி வகுப்பிற்கு அனைத்து மனைப்பொருளியல் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### வட-கிழக்கு

ஆதரவு அளிக்கவில்லை.

இதேவேளை, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சியினர் வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்கவில்லை.

ஆகவே அடுத்தமாதத்தில் கூடவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு, குறித்தளந்தவித தீர்மானத்தையும் உடன் எடுக்க முடியாத நிலையிலுள்ளது எனத் தெரியவருகின்றது.

### கட்டுவனில்

இருந்து தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டது.

கொல்லங்கலட்டிப்பகுதியில் உள்ள வீடு ஒன்றின் மேல் எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்ததில் பாக்கியலட்சுமி (வயது 44) என்பவர் பலத்தகாயமடைந்திருக்கிறார் வீடுபலத்த சேதமடைந்திருக்கிறது மேற்படி பகுதியில் வீழ்ந்து வெடித்த மற்றுமொரு எறிகணையால் பூசகர் ஒருவரு வேறும் சிலரும் காயமடைந்திருக்கின்றனர். (க) (ச


## தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம்

## மேதின ஊர்வல அழைப்பிதழ்

எதிர்வரும் 1992 மே 1ஆம் நாள் நடைபெறவிருக்கும் மேதின ஊர்வலத்தில் பங்கு பற்றுவதற்கு முன்னேற்பாடாக சகல சாலை அனைத்து ஊழியர்களையும் கோண்டாவில் சாலைக்கு அன்றையதினம் நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுச் கொள்ளப்படுகின்றீர்கள். ஊர்வலம் குறிப்பிட்ட நேரத்திற்கு பி.ப. 02.00 மணிக்கு மருதனார் மடத்தில் ஆரம்பமாகும். எனவே கோண்டாவில் சாலையில் மேற்குறிக்கப்பட்ட 12.00 மணிக்கு தவறாது தங்களது துவிச்சக்கர வண்டிகளில் சமூகம் தரவும்.

வ. பி. போ. சபை - பலாலி வீதி, கோண்டாவில்.

[சி/4341]



## அவசர கூட்டம்

தொழில் நுட்பக்கல்லூரி மாணவர் அவையின் நிர்வாக உறுப்பினர்கள், வகுப்பு பிரதிநிதிகள், முதலுதவி பயிற்சிபெற்றவர்கள், உதைபந்தாட்ட, வலைபந்தாட்ட குழு உறுப்பினர்கள், 91-92 ஆம் ஆண்டு பகல் பகுதி நேர மாணவர்கள் ஆகியோருக்கான கூட்டமொன்று இன்று 10 மணிக்கு கல்லூரிமண்டபத்தில் நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி 4342) 'மாணவர் அவை'


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.